

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 153

செவ்வாய்க்கிழமை
28 ஏப்ரல் 2026

சித்திரை 15 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் –12
விலை – ரூபா 50

காணாமலாக்கப்பட்ட லலித், குகன் வழக்கு

## கோத்தாபயவின் சாட்சியம்; இன்று நீதிமன்று கட்டளை!

யாழ்ப்பாணம், ஏப்ரல் 28

**கா**ணாமல் ஆக்கப்பட்ட லலித் மற்றும் குகன் ஆகியோர் தொடர்பான வழக்கில், கோத்தாபய ராஜபக்சவின் சாட்சியத்தை எத்தகைய முறையில் பெறுவது என்பது தொடர்பான கட்டளை இன்று வழங்கப்படவுள்ளது.

»11

## வழக்கறிஞரானார் பேரறிவாளன்!



சென்னை, ஏப். 28

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் நீண்டகாலம் சிறைத்தண்டனை அனுபவித்து விடுதலையான பேரறிவாளன், சென்னை உயர்நீதிமன்றத்தில் நேற்று வழக்கறிஞராகப்

»11

## தையிட்டிக் காணிகளில் இன்று அளவீட்டுப் பணி

யாழ்ப்பாணம், ஏப். 28

தையிட்டி திஸ்ஸ விகாரைக்காக ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளை அளவீடு செய்யும் பணிகள் இன்று இடம்பெறவுள்ளன. இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் நிறைவடைந்துள்ளன.

திஸ்ஸ விகாரைக்காக ஆக்கிரமிக்கப்பட்ட பொது மக்களின் காணிகளை விடுவிக்கும் நோக்கில்

»11



## செம்மணிப் புதைகுழியில் அகழ்வு நேற்று ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஏப். 28

யாழ்ப்பாணம் செம்மணிப் புதைகுழியில் நேற்று மூன்றாம்கட்ட அகழ்வுப் பணிகள் ஆரம்பமாகியுள்ளன. இன்றையதினம் இந்தப் பணிகள் தொடர்ச்சி

»11

## நாட்டில் பரவலாக நேற்றுக் கனமழை

கொழும்பு, ஏப். 28

நாட்டின் பல்வேறு பகுதிகளில் நேற்றிரவு இடிமின்னலுடன் கனமழை பதிவாகியுள்ளது. இந்தக் கால நிலை இன்றும் தொடரும் என முன்னறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

நாட்டின் பல்வேறு பகுதி

»11

துப்பாக்கிமுனையில் அச்சுறுத்திய

## அர்ச்சுனா எம்.பி. விளக்கமறியலில்

### துப்பாக்கியும் பொலிஸார் வசம்

யாழ்ப்பாணம், ஏப். 28

பெண் ஒருவரை துப்பாக்கி முனையில் அச்சுறுத்திய குற்றச்சாட்டில் நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா நேற்றுக் கைதுசெய்யப்பட்டு எதிர்வரும்29ஆம்திகதிவரைவிளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

»11

## விகாரைத் தேவைக்காக காணி சுவீகரிக்கப்படாது

### அமைச்சர் சந்திரசேகர் திட்டவட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 28

தேசிய மக்கள் சக்தியின் ஆட்சிக்காலத்தில் விகாரைத் தேவைக்காகக் காணிகள் சுவீகரிக்கப்படாது என்று அமைச்சர் சந்திரசேகர் உறுதிபடத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாங்கள் பலமுறை கூறியதற்கு அமைய, மக்களின்

»11

கிளிநொச்சியில் சோகம்

## குளத்தில் மூழ்கி ஒருவர் உயிரிழப்பு

கிளிநொச்சி, ஏப். 28

கிளிநொச்சி கனகாம்பிகைக்குளத்தில் நீராடிய போது காணாமற்போயிருந்த குடும்பத்தலைவர் நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டார்.

கிளிநொச்சி - ஸ்கந்தபுரத்தைச் சேர்ந்த 32 வயது

»11

## தேராவில் தமிழ் வித்தியில் ஏராளமான குறைபாடுகள்!

நேரில் ஆராய்ந்தார் ரவிகரன் எம்.பி.

விரிவு பக்கம்:- 10

## அனைத்துக் குருதிக்கும் போதனாவில் தட்டுப்பாடு

விரிவு பக்கம்:- 04

## மசகுஎண்ணெய்; விலை அதிகரிப்பு!

விரிவு பக்கம்:- 03

பருத்தித்துறை நகரசபை விவகாரத்தில்

## ஆளுநரின் விசாரணைக்கு நீதிமன்றம் விதித்தது தடை

யாழ்ப்பாணம், ஏப். 28

வடக்கு மாகாண ஆளுநரால் பருத்தித்துறை நகரசபைத் தவிசாளர் மற்றும் உறுப்பினருக்குஎதிராகமுன்னெடுக்கப்படவிருந்த விசாரணை நடவடிக்கைகளுக்கு நீதிமன்றம் நேற்று இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.

பருத்தித்துறை நகரசபைத் தவிசாளர் டக்ளஸ் டி போல் மற்றும் நகரசபை உறுப்பினர் சிவலிங்கம் பொன்னம்பலம் ஆகியோரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை நேற்று விசார

»11




மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 27.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4414 |
| ஆங்கில எழுத்து | X |
| வெற்றி இலக்கங்கள் | 07 12 13 58 |
| விசேட எழுத்து | X |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 27.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1481 |
| வெற்றி இலக்கினம் | தனுசு |
| வெற்றி இலக்கங்கள் | 23 40 53 58 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 27.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0440 |
| ஆங்கில எழுத்து | Y |
| வெற்றி இலக்கங்கள் | 2 3 2 2 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 27.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2520 |
| ஆங்கில எழுத்து | Z |
| சுப்பர் இலக்கம் | 15 |
| வெற்றி இலக்கங்கள் | 12 22 53 77 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 27.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6172 |
| ஆங்கில எழுத்து | V |
| வெற்றி இலக்கங்கள் | 5 4 7 6 2 0 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 27.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2202 |
| ஆங்கில எழுத்து | O |
| வெற்றி இலக்கங்கள் | 14 23 29 77 |
| விசேட எழுத்து | O |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 27.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0288 |
| வெற்றி இலக்கினம் | மீனம் |
| வெற்றி இலக்கங்கள் | 04 30 44 |

# டீசல் இறக்குமதியில் ஊழல் எதிர்க்கட்சிகள் முறைப்பாடு

கொழும்பு, ஏப்.28

**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் மேற்கொள்ளப்பட்ட டீசல் இறக்குமதியில் பெரும் ஊழல்கள் மற்றும் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளன எனத் தெரிவித்து அதுதொடர்பில் விசாரணை நடத்த வேண்டும் என்று இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவில் முறைப்பாடுசெய்யப்பட்டுள்ளது.**

கூட்டு எதிர்க்கட்சியின் பிரதிநிதிகளால் நேற்று இந்த முறைப்பாடு செய்யப்பட்டது. டீசல் இறக்குமதி நடவடிக்கையால் அரசாங்கத்துக்குப் பெரியளவு நிதி நட்டம் ஏற்பட்டுள்ளது என்று அந்த முறைப்பாட்டில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் உரிய அதிகாரிகளிடம் விசாரணை நடத்தி, சம்பந்தப்பட்ட ஆவணங்களைப் பரிசீலிக்கவேண்டும் என்று எதிர்க்கட்சிப் பிரதிநிதிகள் ஆணைக்குழுவிடம் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இந்தக் கொடுக்கல் வாங்கலில் மோசடி இடம்பெற்றுள்ளதா என்பது குறித்துக் கண்டறியப்பட வேண்டும் எனவும், இந்த நட்டத்துக்குப் பொறுப்பான நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனவும் அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## சாகரிக்கா மீண்டும் சேவையில்!

கொழும்பு, ஏப்.28

அண்மையில் தடம்புரண்ட 'சாகரிக்கா' ரயில் நேற்று முதல் மீண்டும் சேவையில் இணைக்கப்பட்டுள்ளது என்று ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த 24ஆம் திகதி பெலியத்தவிலிருந்து மருதானை நோக்கி பயணித்த சாகரிக்கா ரயில் வாதுவை ரயில் நிலையத்தில் தடம்புரண்டது. ரயிலின் 13 பெட்டிகளில் 11 பெட்டிகள் தடம்புரண்டன. தடம்புரண்ட சாகரிக்கா ரயிலில் கடமையாற்றிய நான்கு ஊழியர்கள் ரயில் சேவைக் கடமைகளில் இருந்து தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பிலான விசாரணைகள் நிறைவடையும் வரை அவர்களை ரயில் சேவைக் கடமைகளில் ஈடுபடுத்துவதில்லை என தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

அந்த ரயிலின் சாரதி, காப்பாளர், உதவிச் சாரதி மற்றும் உதவிக் காப்பாளர் ஆகியோரை ரயில் சேவைக் கடமைகளில் ஈடுபடுத்துவதில்லை எனத் தீர்மானிக் கப்பட்டுள்ளது. (எ-இ)

## விசேட சுற்றிவளைப்புகளில் 559 சந்தேகநபர்கள் கைது!

கொழும்பு, ஏப்.28

நாடளாவிய ரீதியில் நேற்றுமுன்தினம் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட விசேடசுற்றிவளைப்புகளில், 559 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

நேரடியாகக் குற்றங்களுடன் தொடர்புடைய 9 பேரும், பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 203 பேரும், திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 153 பேரும் கைதுசெய்யப்பட்டவர்களில் அடங்குகின்றனர்.

இதேவேளை, மதுபோதையில் வாகனம் செலுத்திய 123 பேரும், கவனக்குறைவாக வாகனம் செலுத்திய 61 பேரும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். பிற போக்குவரத்துக் குற்றங்களுக்காக 3,988 பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (எ-இ)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 27.04.2026 | திங்கட்கிழமை | 0880 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| P | 0 5 7 6 2 7 | |

| Super Ball DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 27.04.2026 | திங்கட்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| 3146 | M | 23 27 75 76 |

| சனிதா DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 27.04.2026 | திங்கட்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| A | 09 21 67 73 | 5307 |

| SASIRI DLB | |
|---|---|
| திகதி | தினம் |
| 27.04.2026 | திங்கட்கிழமை |
| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
| 0976 | 05 17 33 |

| லக்ன ராசி DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 27.04.2026 | திங்கட்கிழமை | |
| சிம்மம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| | 03 11 28 58 | 4858 |

| KAPRUKA DLB | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 27.04.2026 | திங்கட்கிழமை | | |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| A | 30 | 46 56 62 65 | 2322 |

| அத கோடிபதி DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 27.04.2026 | திங்கட்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| B | 13 14 21 51 | 2972 |



## தங்கத்தின் விலை மீண்டும் அதிகரிப்பு

கொழும்பு.ஏப்.28

இலங்கையில் தங்கத்தின் விலை மீண்டும் அதிகரித்துள்ளது என்று அகில இலங்கை நகையக வியாபாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. நேற்றுமுன்தினம் 24 கரட் தங்கம் ஒரு பவுண் 3 இலட்சத்து 95 ஆயிரம் ரூபாவாக விற்பனை செய்யப்பட்டநிலையில், 2 ஆயிரம் ரூபாவால் அதிகரிக்கப்பட்டு 3 இலட்சத்து 97 ஆயிரம் ரூபாவாக தற்போது விற்பனை செய்யப்படுகின்றது. அதேவேளை 22 கரட் தங்கம் ஒரு பவுண் 3 லட்சத்து 63 ஆயிரத்து 400 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டநிலையில், ஆயிரத்து 800 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு 3 இலட்சத்து 65 ஆயிரத்து 200 ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றது. இதற்கமைவாக 24 கரட் தங்கம் ஒரு கிராம் 49 ஆயிரத்து 625 ரூபாவாகவும், 22 கரட் தங்கம் ஒரு கிராம் 45 ஆயிரத்து 650 ரூபாவாகவும், விற்பனை செய்யப்படுகிறது என்றும் நகையக வியாபாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. (க-இ)

## 52 கிராம் ஹெரோயின் மீட்பு

கொழும்பு, ஏப்.28

கட்டான, ஜயபிம பகுதியில் 52 கிராம் 200 மில்லிகிராம் ஹெரோய்னை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கட்டான பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்டவர் நீர்கொழும்பைச் சேர்ந்த 31 வயதுடையவர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கட்டான பொலிஸார் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-இ)

## ஊடக சவால்களை முறியடிக்கமுடியும்

### அமைச்சர் லால்காந்த தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.28

எமக்கெதிராக மேற்கொள்ளப்பட்டுவரும் ஊடக சவால்களை எம்மால் முறியடிக்க முடியும் என விவசாய மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் கே.டி. லால் காந்த தெரிவித்துள்ளார். கண்டி செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற விசேட நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

சில ஊடக நிறுவனங்கள் மற்றும் சமூக ஊடக வலைப்பின்னல்கள் எமக்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுகளையும் விமர்சனங்களையும் முன்வைத்துவருகின்றன. அத்தகைய சவால்களை எதிர்கொள்ள எம்மால்முடியும். இவ்வாறான விமர்சனங்களைச் சவாலாகக் கருதவில்லை. அவற்றை வெற்றிகொள்வதற்கு எனக்கும், அரசுக்கும் முழுமையான ஆற்றல் உள்ளது-என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




# போதைப்பொருள் பிக்குகள் மீது சட்டநடவடிக்கைகள் நிச்சயம்!

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.28

**கட்டுநாயக்க விமானநிலைய வளாகத்தில் போதைப்பொருளுடன் சிக்கிய பிக்குகள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.**

நேற்று நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த அமைச்சர், சட்டத்தின் முன்னால் அனைவரும் சமமானவர்கள் என்றும், பலவீனமானவர்களுக்கு ஒரு சட்டமும் பலமானவர்களுக்கு ஒரு சட்டமும் நடைமுறைப்படுத்தப் படமாட்டாது என்றும் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

இந்தச் சம்பவம் தொடர்பில் நீதிமன்றில் அறிக்கையிடப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக மகாசங்கத்தினரின் அறிவுரை மற்றும் ஆலோசனைகளுடன் ஒரு பக்கத்தில் செயற்படும் அதேவேளை, சட்டபூர்வமாக எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை நாங்கள் எடுப்போம். சட்டத்தின் முன்னால் அனைவரும் சமம் என்பதை நாம் அனைவரும் அறிவோம். பலவீனமானவர்களுக்கு ஒரு சட்டமும் பலமானவர்களுக்கு இன்னொரு சட்டமும் செயற்பட இடமில்லை. யாராவது சட்டவிரோதமாகச் செயற்பட்டால், அதில் தலையிட்டு அவர்களைச் சட்டத்தின் பிடியில் சிக்க வைக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுப்போம்-என்றார். (எ-இ)

# திறைசேரி நிதி மாயம் கொழும்பில் போராட்டம்

கொழும்பு, ஏப்.28

இலங்கை திறைசேரியால் வெளிநாட்டுக்கடன் தவணையாகச் செலுத்தப்பட்ட 2.5 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி, வேறொரு தரப்பினரின் கைக்குச் சென்றமைக்கு எதிர்ப்புத்தெரிவித்து நேற்றுக் கொழும்பில் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. நிதி அமைச்சின் வளாகத்துக்கு முன்பாக சர்வஜன அதிகாரம் அமைப்பினர் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

இதேவேளை, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பிரதிநிதிகளும் இந்த நிதிமோசடிக்கு எதிராக நேற்றுக் காலை இலங்கை மத்திய வங்கிக்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டனர். அரகலயவின் பிரஜைகள் அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்ட மற்றுமொரு எதிர்ப்புப் போராட்டமும் மத்திய வங்கிக்கு முன்பாக இடம்பெற்றது. (எ-இ)

# ரூபாவின் பெறுமதியில் மாற்றமில்லை!

கொழும்பு, ஏப்.28

கடந்த வெள்ளிக்கிழமையுடன் ஒப்பிடுகையில், நேற்று அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதியில் மாற்றம் ஏற்படவில்லை.

அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 314 ரூபா 57 சதமாகவும், விற்பனைப் பெறுமதி 322 ரூபா 27 சதமாகவும் காணப்பட்டது.

யூரோ ஒன்றின் கொள்முதல் பெறுமதி 367 ரூபா 52 சதமாகவும், விற்பனைப் பெறுமதி 379 ரூபா 25 சதமாகவும் காணப்பட்டது. சுவிஸ் பிராங் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 397 ரூபா 90 சதமாகவும், விற்பனைப் பெறுமதி 413 ரூபா 58 சதமாகவும் காணப்பட்டது. (எ-இ)

# மசகு எண்ணெய் விலை அதிகரிப்பு

கொழும்பு, ஏப்.28

அமெரிக்கா மற்றும் ஈரானுக்கிடையிலான இரண்டாம்கட்ட அமைதிப் பேச்சு வார்த்தைகள் மீண்டும் தடைப்பட்டதைத்தொடர்ந்து, நேற்று ஆசிய சந்தையில் மசகு எண்ணெய் விலை அதிகரிப்பைப் பதிவுசெய்துள்ளது. உலகளாவிய ரீதியில்விலைநிர்ணயிக்கப் பயன்படுத்தப்படும் பிரெண்ட் வகை மசகு எண்ணெய் ஒரு வீதத்தால் உயர்ந்து, ஒரு பீப்பாய் 106.50 டொலராக விற்பனையானது. அதேவேளை, அமெரிக்கச் சந்தையில் மசகு எண்ணெய் (WTI) 1வீதத்தால் உயர்ந்து 95.40 டொலராகப் பதிவாகியுள்ளது. (எ-இ)





# முதியோர்களுக்காக 'ஸ்மார்ட் வில்லேஜ்'

கொழும்பு, ஏப்.28

இலங்கை தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களத்தின் கணிப்புகளின்படி, 2040ஆம் ஆண்டளவில் இலங்கையின் மக்கள் தொகையில் நான்கில் ஒரு பகுதியினர் அதாவது சுமார் 25 சதவீதத்தினர் 60 வயது அல்லது அதற்கு மேற்பட்டவர்களாக இருப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

வேகமாக வயதாகிவரும் இந்த மக்கள் தொகையின் தேவைகளைப் பூர்த்திசெய்யும்வகையில், முதியவர்கள் டிஜிற்றல் ரீதியாகவும் சமூக ரீதியாகவும் உள்வாங்கப்படுவதை உறுதிசெய்ய 'ஸ்மார்ட் வில்லேஜ்' திட்டத்தை உருவாக்க அரசாங்கம் முன்னுரிமை அளித்துவருகிறது.

முதியோர் பராமரிப்பு நிலையங்களை மட்டும் சார்ந்திருக்காமல், முதியவர்கள் தமது சொந்த சமூகங்களுக்குள்ளேயே தங்கியிருந்து சுறுசுறுப்பாக இயங்கக்கூடிய சமூக அடிப்படையிலான ஒருங்கிணைந்த நீண்டகால பராமரிப்புக் கட்டமைப்பை உருவாக்குவதே இதன் [illegible] சமூகப் பாதுகாப்பு [illegible] பன்னிலகே தெரிவித்துள்ளார். (எ-இ)

# புத்தருக்குத்தான் வெளிச்சம்.

'வெள்ளையா இருக்கிறவன் பொய் சொல்லமாட்டான்' என்ட கணக்கில சில விசயங்களை எங்கட சனம் கண்ணைமூடிக்கொண்டு நம்பும். சாமிக்குப் பூசை செய்யிறவை புனிதமாத்தான் இருப்பினம், அவை எந்தவொரு கிலிசைகெட்ட வேலையளும் செய்யமாட்டினம் எண்டதும் அப்பிடி ஒரு நம்பிக்கை. அதுவும் எங்கட தமிழ்ச் சனத்தை விடவும் சிங்கள ஆக்களிட்ட இந்த நம்பிக்கை கடுமையா இருக்கு. ஒரு பிக்குவைக் கண்டாலே ஏதோ புத்தரையே நேரில கண்டமாதிரி கும்பிட்டுக் கூத்தாடி அப்பிடியே அவையின்ர காலில விழுந்திடுவினம். அப்பிடியொரு பயபக்தி. ஆனால் உந்தப் பயபக்தியைத்தான் பிக்குமார் தங்கட மூலதனமாக்கி, தாங்கள் நினைச்சதையெல்லாம்செய்துகொண்டிருக்கினம். இலங்கையின்ர முந்தின பிரதமர் பண்டாரநாயக்கவைச் சுட்டுச்சாக்காட்டின தல்துவே சோமராம தேரரில இருந்து இப்ப இனவாதம் கக்கிற ஞானசார தேரர் வரைக்கும் இப்பிடி பிக்குகள் தங்கட காரியத்தைச் சாதிக்க சிங்களச் சனத்தின்ர பக்தியை ஒரு ஆயுதமாப் பாவிக்கிற விசயம் தொடர்ந்து நடக்குது. அதின்ர லேட்டஸ்ட் விசயம் தான், 22 பிக்குகள் போதைப்பொருள்களோட கட்டுநாயக்க எயார்போட்டால வரேக்க பிடிபட்ட சம்பவம்.

வழக்கமா பிக்குமார் எயார்போட்டால போகேக்க, அஞ்சடிக்கு அங்காலயே செக்கியூரிட்டிமார் நிண்டிடுவினம். கிட்டப் போய் அவையைச் செக் பண்ணமாட்டினம். அதாலதான் உந்த 22 பிக்குமாரும் ஆளுக்கு ஐவைஞ்சு கிலோ போதைப்பொருளை ஏதோ சொக்லேட் மாதிரி துணிஞ்சு கொண்டந்திருக்கினம். ஆனால் அவையின்ர கெட்டகாலம்,இப்பிடி அந்த 22 பிக்குகளும் போதைப்பொருளோட வருகினம் எண்டு முதலே தகவல் கிடைச்சிட்டுது. அதாலதான் ஒருநாளும் இல்லாத திருநாளா அண்டைக்கு மட்டும் பிக்குகளை செக் பண்ணி, 110 கிலோ போதைப்பொருளைப் பிடிச்சிருக்கினம். அதுக்கும் காரணம் இருக்கு. உந்தப் பிக்குகள் தாய்லாந்துக்குப் போய் அங்க பிக்குகள் மாதிரி நடந்து கொள்ளேலை. ஏதோ ரூருக்குப் போன பெடியள் மாதிரி உடுப்பெல்லாம் மாத்தி, குடிச்சு வெறிச்சு குத்தாட்டம் போட்டுட்டு கடைசியா ஆளுக்கு அஞ்சு கிலோ போதைப்பொருளோட இலங்கைக்கு வெளிக்கிட்டிருக்கினம். இவையள் தாய்லாந்தில அடிச்ச கூத்தைப் பார்த்து மனம்வெறுத்துப்போனவைதான், 'இந்த 22 பிக்குகளும் போதைப்பொருளோட வருகினம். அப்பிடியே ஆக்களை அமத்திப் பிடியுங்கோ' எண்டு தகவல் குடுத்திருக்கினம். இல்லாட்டி வழமைபோல செக்கிங் இல்லாமலேயே அந்த 22 பிக்குகளும் எயார்போட்டை கடந்திருப்பினம். இத்தறிக்கு அந்தப் போதைப்பொருள்கள் உரியவையின்ர கையில போயிருக்கும்.

இப்ப என்ன பகிடியெண்டால், போதைப்பொருள் கடத்தினவை காவியுடை போட்டுக்கொண்டு பிக்குகள் மாதிரி வேசம் போட்டு வந்தவையே தவிர அவையள் பிக்குகள் இல்லை, பிக்குகளுக்கு கெட்டபேர் வரோணும் எண்டதுக்காக அரசாங்கம் இப்பிடி விளையாட்டுக் காட்டுது எண்டு இனத்துவேசம் கதைக்கிற ஞானமில்லாத பிக்குகள் சிலர் சொல்லுகினம். இன்னொரு தரப்போ 'அந்தப் பிக்குகள் அப்பாவியள். அவைக்கு கெட்டபேர் வரப்பண்ணுறதுக்காக வேற ஆரோ அவையின்ர 'பாக்கில' அஞ்சு கிலோ போதைப்பொருளை வைச்சிட்டினம் எண்டு கதகளி ஆடுகினம். இப்பிடி மாறி மாறி உந்தத் துவேசம் பிடிச்ச பிக்குகள், போதைப்பொருள் கடத்தின பிக்குகள் 22 பேருக்கும் வக்காலத்து வாங்கிறதைப்பாக்கேக்க, உந்தத் துவேசம் பிடிச்ச பிக்குகளுக்கும் போதைப்பொருள் விசயங்களில தொடர்பிருக்குமோ எண்டும் சந்தேகமாத்தான் கிடக்கு. ஏனெண்டால் இந்தமுறை வெளியால இருந்து தகவல் வந்ததாலதான் பொலிஸால பிடிக்க முடிஞ்சது. இல்லாட்டில் வழக்கம் மாதிரி தூரநிண்டபடி எயார்போர்ட் செக்கியூரிட்டிமார் பிக்குகளைக் கும்பிட்டபடி நிண்டுகொண்டிருந்தால் எல்லாப் போதைப்பொருளும் நாட்டுக்க வந்திருக்கும். அப்பிடி இதுக்கு முந்தி எத்தினை கிலோ போதைப்பொருளைப் பிக்குகள் கொண்டந்திச்சினமோ? எல்லாம் புத்தருக்குத்தான் வெளிச்சம் கண்டியளே!

padsi@uthayan.com -பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# யாழ்.போதனா மருத்துவமனையில் அனைத்துக் குருதிக்கும் தட்டுப்பாடு

## கொடையாளர்களுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஏப்.28

யாழ். போதனா மருத்துவமனையின் குருதி வங்கியில் அனைத்து வகைக் குருதிக்கும் மீண்டும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. எனவே கொடையாளர்கள் குருதித்தானம் செய்து உதவவேண்டும் என்று மருத்துவமனையின் குருதி வங்கிப் பிரிவினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

திட்டமிடப்பட்ட குருதிக்கொடை முகாம்கள் நடைபெறாமல் இரத்துச் செய்யப்படல், குருதிக்கொடை முகாம்களில் எதிர்பார்க்கப்பட்ட கொடையாளர்களின் எண்ணிக்கை குறைவடைவதல், எதிர்பார்த்ததை விடத் திடீரெனக் குருதி விநியோகம் அதிகரித்தல் போன்ற காரணங்களால் அடிக்கடி குருதிக்குத் தட்டுப்பாடு ஏற்படுகின்றது.

இந்த மாதம் மட்டும் 4 குருதிக்கொடை முகாம்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. எனவே இளைஞர்கள் மற்றும் யுவதிகள் குருதிக்கொடை வழங்க முன்வரவேண்டும். மேலதிக விபரங்களுக்கு 0772105375 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளமுடியும் என்றும் குருதி வங்கிப்பிரிவினர் தெரிவித்துள்ளனர். (க-66)

# பல்கலை அனுமதிக்கு வழிகாட்டிக் கைநூல்

யாழ்ப்பாணம், ஏப்.28

பல்கலைக்கழக அனுமதிக்கான வழிகாட்டிக் கைநூல் வெளியிடப்பட்டுள்ளது என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. 2025ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை முடிவுகள் அண்மையில் வெளியானதைத் தொடர்ந்து, பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பிப்பதற்கான விரிவான வழிகாட்டல்கள் இந்தக் கைநூலில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மாணவர்கள் பாடநெறிகளுக்கு எவ்வாறு விண்ணப்பிக்கவேண்டும் என்பது குறித்த தெளிவான அறிவுறுத்தல்கள் இதில் குறிப்பிடப்பட்டுள்ளன. தகுதியுள்ள மாணவர்கள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தினூடாக இந்தக் கைநூலைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்றும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. அதேவேளை 2025ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில், ஒரு இலட்சத்து 76 ஆயிரத்து 527 மாணவர்கள் பல்கலைக்கழக நுழைவுக்குத் தகுதிபெற்றுள்ளனர். (க-இ)

# அராலியில் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஏப்.28

சைவ வாழ்வியலில் திருமந்திரம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக நடத்தப்படும் வாராந்தத் திருமந்திரச் சிறப்புச் சொற்பொழிவுத்தொடர் எதிர்வரும் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு அராலி கிழக்கு மலையாளங்காடு ஐயனார் ஆலயத்தில் இடம்பெறவுள்ளது.

திருமூலநாயனார்குருபூசையை அடுத்து, மாணவர்களின் கலை நிகழ்வும், அருள்மொழி வாருதி திருவாசகப்பிரியன், க. கயிலைவாசனின் சாத்திரத்துக்குத் திருமந்திரம் எனும் சொற்பொழிவும் இடம்பெறும். சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப்பரிசில்கள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

# சின்மயா மிஷன் ஆன்மிக யாத்திரை

யாழ்ப்பாணம், ஏப்.28


உலகம் முழுவதும் வேதாந்த ஞானத்தையும், ஆன்மிகப் பயணத்தையும் பரப்பிவரும் சின்மயா மிஷனின் 75ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு, நாளை புதன்கிழமை மாலை 4 மணிமுதல் 6.30 மணிவரை, புங்கன்குளத்தில் அமைந்துள்ள ஜெ.ஹொட்டலில் ஆன்மிக நிகழ்வு நடைபெறும். ஆன்மிகத்தை நாடுபவர்கள், ஞானத்தை விரும்புபவர்கள், மன அமைதியைத் தேடுபவர்கள் அனைவரும் இதில் பங்கேற்கலாம் என்று ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (க)

# காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலக அதிகாரிகளின் செயற்பாடுகள் மந்தம்

## சிவில் அமைப்புகள் குற்றச்சாட்டு

மன்னார், ஏப்.28

காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி பெற்றுக்கொடுப்பதில், அதன் அலுவலக அதிகாரிகள் மந்த கதியில் செயற்படுகின்றனர் என்று சிவில் சமூக அமைப்பினர் குற்றஞ்சாட்டினர். மன்னார் சிவில் சமூக அமைப்புகள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தின் அதிகாரிகளுக்கு இடையிலான கலந்துரையாடல், மன்னார் மாவட்டச் செயலகத்தில் கடந்த வாரம் இடம்பெற்றது.



அதில் அலுவலக அதிகாரிகள் முன்னெடுத்துவரும் தற்போதைய செயற்பாடுகள் தொடர்பாகப் பலகேள்விகளும் முன்வைக்கப்பட்டன. இதற்குப் பதிலளித்த அலுவலகத்தின் சிரேஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர் கனிஷ்க ஹேவாவிதான, பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதி மற்றும் நிவாரணங்களை வழங்குவதே எங்களுடைய நோக்கம். எதிர்வரும் காலங்களில் அதிகாரிகளுடன் கலந்துரையாடி இன்னும் வினைத்திறன்மிக்க செயற்பாடுகளை முன்னெடுப்போம்-என்றார். (க-60)

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** உற்சாகமான நாளாக அமையும். தந்தைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். சகோதரர்கள் உங்களிடம் ஆலோசனை கேட்டுவருவார்கள். சிலருக்கு அவ்வப்போது மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும்.

**இடபம்:** மகிழ்ச்சியான நாள். புதிய முயற்சிகள் எதுவும் வேண்டாம். ஒரு சிலருக்கு வெளியூர்களில் இருக்கும் கோயில்களைத் தரிசிக்கும் வாய்ப்பு ஏற்படக்கூடும். மாலையில் குடும்பத்துடன் உறவினர், நண்பர்கள் வீட்டுக்குச் சென்று வருவீர்கள்.

**மிதுனம்:** தெய்வ அனுகூலம் நிறைந்த நாளாக இருக்கும். மனதுக்கு மகிழ்ச்சி தரும் சம்பவம் நடைபெறும். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும், சுபச்செலவாக இருக்கும் என்பது ஆறுதல் தரும்.

**கடகம்:** தேவையான பணம் கையில் இருப்பதால் உற்சாகமாக இருப்பீர்கள். சிலருக்குத் தாய்வழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். வாழ்க்கைத் துணைவழியில் மகிழ்ச்சியான செய்தி கிடைக்கும்.

**சிம்மம்:** புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். சிலருக்கு நவீன டிசைனில் ஆடை வாங்கும் வாய்ப்பு ஏற்படும். உங்கள் தேவையறிந்து நண்பர் செய்யும் உதவி மகிழ்ச்சி தரும்.

**கன்னி:** குடும்பம் அல்லது வேலை தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதை இன்றைக்குத் தவிர்ப்பது நல்லது. எதிர்பாராத செலவுகள் ஏற்பட வாய்ப்பு இருப்பதால் சிலர் கடன் வாங்கவும் நேரிடும். மற்றவர்களிடம் பேசும்போது நிதானம் அவசியம்.

**துலாம்:** இன்றைக்கு எதிலும் நிதானமாகச் செயற்படவும். பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. குடும்பத்தில் வீண்விவாதம் ஏற்படக் கூடும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

**விருச்சிகம்:** தொடங்கும் காரியங்கள் வெற்றி பெறும் நாள். தேவையான பணம் கிடைக்கும். தாய்வழி உறவினர்கள் வருகையால் வீட்டில் உற்சாகம் உண்டாகும்.

**தனுசு:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. தந்தையின் தேவையைப் பூர்த்திசெய்து மகிழ்வீர்கள். குடும்பத்தினருடன் வெளியிடங்களுக்குச் சென்று வரும் வாய்ப்பு ஏற்படும்.

**மகரம்:** பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்ற முயற்சி செய்யவும். உறவினர்கள் வருகையால் திடீர்ச் செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்துவிடுவீர்கள்.

**கும்பம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும் நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். தாயிடம் கேட்ட உதவி கிடைக்கும். உடல் நலனில் கவனம் தேவை.

**மீனம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். புதிய முடிவுகளைத் துணிந்து எடுப்பீர்கள். வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தினர் உங்கள் யோசனைக்கு முக்கியத்துவம் கொடுப்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

# புத்தரின் பெயரால்...!

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் 110 கோடி ரூபா பெறுமதியுடைய போதைப்பொருட்களுடன் 22 தேரர்கள் கைதாகியுள்ள விவகாரம் , பௌத்த தர்மத்தின் காவலர்களாகத் தங்களைக் காட்டிக்கொள்ளும் ஒரு தரப்பினரின் முகமூடியைக் கிழித்தெறிந்துள்ளது. ஒவ்வொரு தேரரின் பயணப் பொதியிலும் பாடசாலை உபகரணங்களுக்கு நடுவே தலா 5 கிலோ குஷ் மற்றும் ஹஷிஷ் ரக போதைப் பொருட்கள் சூட்சுமமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த விதம், இது ஒரு திட்டமிட்ட 'போதைப் பெரும் கடத்தல்' என்பதை உறுதிப்படுத்துகின்றது. பௌத்த சாசன வரலாற்றில் இது ஒரு கரும்புள்ளி என்று மகாநாயக்க தேரர்கள் கண்டனம் வெளியிட்டாலும், இந்தச் சம்பவம் இலங்கைச் சமூகத்துக்குச் சொல்லும் செய்தி மிகஆழமானது; குறிப்பாக, 'பிக்குகள் செய்வதெல்லாம் சரி' என்று கண்மூடித்தனமாக நம்பும் பேரினவாத மனோநிலைக்கு இது ஒரு பலமான சாட்டையடியாகும்.

இலங்கையின் அண்மைக்கால வரலாற்றில், வடக்கு -கிழக்கில் தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களை அபகரிப்பதிலும், தமிழர்களின் மரபார்ந்த வழிபாட்டிடங்களை ஆக்கிரமித்து அங்கு புத்தர் சிலைகளை நிறுவுவதிலும் சில பிக்குகள் முன்னின்று செயற்பட்டனர். 'தொல்லியல்' என்ற போர்வையில் முன்னெடுக்கப்பட்ட இந்த ஆக்கிரமிப்புகளுக்குப் பேரினவாத அரசாங்கங்களும், பெரும்பான்மைச்சமூகமும் நிபந்தனையற்ற ஆதரவை வழங்கின. பிக்குகள் எதைச் சொன்னாலும் அது 'தேசிய நலன்' என்றும், அவர்கள் எங்கு கை காட்டினாலும் அது 'பௌத்த பூமி' என்றும் நம்பிய மகாவம்ச மனோநிலை, பிக்குகளைக் கேள்விகளுக்கு அப்பாற்பட்ட புனிதர்களாகவே பார்த்தது. ஆனால், இன்று அதே காவி உடையைப் போர்த்திக்கொண்டு கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான போதைப் பொருள்களை நாட்டுக்குள் கொண்டு வந்திருப்பது, 'புத்தரின் பெயரால் எதை வேண்டுமானாலும் செய்யலாம்' என்ற அவர்களின் துணிச்சலையே காட்டுகின்றது.

தாய்லாந்து சென்று சாதாரண உடையில் களித்திருந்த இவர்களின் 'மறைமுக வாழ்க்கை' கைபேசி காணொளிகள் மூலம் அம்பலமாகியுள்ளது. காவிக் என்பது உலக இன்பங்களைத் துறந்தவர்களின் அடையாளம்; ஆனால், இன்று அது சர்வதேசக் கடத்தல்காரர்களின் பாதுகாப்புக் கவசமாக பயன்படுத்தப்பட்டிருப்பது பேரதிர்ச்சியானது. தமிழர்களின் நிலங்களை ஆக்கிரமிக்கும்போது பிக்குகளைத் தட்டிக் கேட்கத் தயங்கிய சட்டமும், சமூகமும் இன்று அவர்களின் போதைப்பொருள் கடத்தலைச் சகித்துக் கொள்ளப் போகின்றதா? அல்லது 'போலிப் பிக்குகள்' என்ற ஒற்றைச் சொல்லில் இவர்களைக் கடந்து போகப் போகின்றதா?

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட ஒரு தேசம், இப்போது போதைப்பொருட்களால் சிதைந்து கொண்டிருக்கும் வேளையில், ஆன்மீகத் தலைவர்களாக இருக்க வேண்டியவர்களே அதற்குத் துணை போவது மன்னிக்க முடியாத குற்றமாகும். பிக்குகள் சொன்னால் அது மந்திரம் என்ற குருட்டுத்தனமான நம்பிக்கையைத் தென்னிலங்கைச் சமூகம் இப்போதாவது மறுபரிசீலனை செய்ய வேண்டும். காவி உடையானது ஆக்கிரமிப்பிற்கோ அல்லது சட்டவிரோதக் கடத்தல்களுக்கோ வழங்கப்பட்ட 'விலக்குரிமை' அல்ல. இந்தப் போதைப்பொருள் விவகாரம் என்பது தனிப்பட்ட நபர்களின் குற்றம் மட்டுமல்ல, அது புனிதத்தின் பெயரால் அதிகாரத்தைச் சுவைத்த ஒரு கட்டமைப்பின் சீரழிவாகும். சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பதை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு இப்போது அரசாங்கத்திற்கு உண்டு. இல்லையேல், இந்தக் காவிப் போர்வை எதிர்காலத்தில் இன்னும் பல குற்றங்களுக்குப் புகலிடமாக மாறிவிடும்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com






## பொய்யாமொழி

**உதவி வரைத்தன்று உதவி உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து**

**பொருள்:** கைம்மாறாகச் செய்யும் உதவி முன்செய்த உதவியின் அளவை உடையது அன்று; உதவி செய்யப்பட்டவரின் பண்புக்கு ஏற்ற அளவை உடையதாகும்.




# தபால் ஊழியர்களுக்கான கொடுப்பனவில் மோசடி!




## இலஞ்ச ஊழல் ஆணைக்குழு விசாரணை

**கொழும்பு, ஏப்.28**
**தபால் ஊழியர்களில் ஒரு குழுவினருக்கு முறையற்ற விதத்தில் 10 மில்லியன் ரூபாவுக்கு அதிகமான நிதி, மேலதிக நேர கொடுப்பனவாக வழங்கப்பட்டுள்ளமை தொடர்பில், லஞ்ச ஊழல் ஆணைக்குழு விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.**

சிவில் சமூக அமைப்பால் கடந்த 2025 ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாட்டை அடிப்படையாகக் கொண்டு இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று ஆணைக்குழுவின் செயலாளர் கே.ஜி. லனெரோல் தெரிவித்துள்ளார். கடந்த ஆண்டின் இறுதியில் தபால் மா அதிபர் ருவன் சத்குமாரவால் மேற்கொள்ளப்பட்ட தணிக்கை விசாரணைகளின் மூலம், இந்த முறைகேடுகள் கண்டறியப்பட்டன. முறையான விரல் அடையாளப் பதிவின்றி பெருமளவிலான ஊழியர்கள் மேலதிக நேரக் கொடுப்பனவுகளைப் பெற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. வாகனப் பராமரிப்பு போன்ற பணிகளின் போது, தேவையற்ற ஊழியர்களை பெயர்களைப் பட்டியலில் இணைத்தும், வேலை நேரத்தை செயற்கையாக அதிகரித்தும் நிதி கோரப்பட்டுள்ளது என்றும் தெரியவந்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். அதே வேளை இந்த நிதி மோசடிகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில், ஊழியர்களின் வருகையை உறுதிப்படுத்த விரல் அடையாள இயந்திரங்களை அறிமுகப்படுத்த அரசாங்கம் முயற்சித்தது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தபால் ஊழியர்கள் பணிப்புறக்கணிப்புப் போராட்டங்களில் ஈடுபட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க-இ)

# 7 கிலோ சுறாவுடன் நால்வர் கைது

மட்டக்களப்பு, ஏப்.28
வாழைச்சேனை மீன்பிடித் துறைமுகத்தில், சுமார் 7 கிலோவுக்கு அதிகமான சட்டவிரோத சுறா மீன்களை வைத்திருந்த குற்றச்சாட்டில், நான்கு மீனவர்கள் கடலோரப் பாதுகாப்புப் படையினரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.
துறைமுகத்தை வந்தடைந்த உள்ளூர் இழுவைமடி மீன்பிடிப் படகொன்றைப் பரிசோதித்த போது, இவை கைப்பற்றப்பட்டன. மீனவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட சுறா மீன்கள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக வாழைச்சேனை மீன்பிடிப் பரிசோதகர் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (க-இ)

# தொலைதூரப் பணியை விரிவுபடுத்தத் தீர்மானம்

கொழும்பு, ஏப்.28
மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள போர்ச் சூழல் மற்றும் உலகளாவிய எரிபொருள் விநியோகக் கட்டுப்பாடுகள் காரணமாக, இலங்கையில் அரச துறையில் தொலைதூரப் பணி முறையை விரிவுபடுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது. எரிபொருள் பாவனையைக் குறைத்து, தேசிய எரிசக்தி இருப்பை முறையாக முகாமைத்துவம் செய்யும் நோக்குடன் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. பிரதமர் தலைமையிலான பொதுச் சேவைகள் பராமரிப்புக்கான அமைச்சரவைக் குழுவின் அறிவுறுத்தலில், டிஜிற்றல் பொருளாதார அமைச்சு மற்றும் பொது நிர்வாக அமைச்சு ஆகியன இணைந்து இதற்கான இடைக்கால வழிகாட்டல்களை வெளியிட்டுள்ளன. (க-இ)



# சிகரெட்டுக்களுடன் மாணவன் கைது

கொழும்பு, ஏப்.28
சுமார் 92 லட்சத்து 22 ஆயிரத்து 400 ரூபா பெறுமதியான வெளிநாட்டுச் சிகரெட்டுகள் மற்றும் இலத்திரனியல் சிகரெட்டுக்களை சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குக் கொண்டுவர முயன்ற மாணவன், கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் வருகை முனையத்தில் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார். வர்த்தகர்களுக்காக ஒதுக்கப்பட்ட வழியூடாக இவற்றைக் கொண்டு வந்த நபர், விமான நிலைய குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.
சந்தேகநபர் கொழும்பு14 பகுதியைச் சேர்ந்த 19 வயதுடைய மாணவன் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. டுபாய்க்குச் சென்று திரும்பியவரது 3 பயணப் பொதிகளையும் சோதனையிட்ட போதே இவை கைப்பற்றப்பட்டன.
55 ஆயிரத்து 600 வெளிநாட்டுச் சிகரெட்டுகள், 70 இலத்திரனியல் சிகரெட்டுகள் மற்றும் 55 அங்குலத் திரை கொண்ட தொலைக்காட்சிப் பெட்டி என்பன கைப்பற்றப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

**நாளை**
புதன்கிழமை- சித்திரை 16
29.04.2026
சுபநேரம் : 04.28 – 05.58
ராகுகாலம் : 11.58 – 01.28

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் துணை

# புங்குடுதீவு அருள்மிகு கண்ணகை அம்மன்
# என வழங்கும்
# ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம்

## வருடாந்த தேர்த்திருவிழா விஞ்ஞாபனம்

**30.04.2026 வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு**




## தேர்த் திருவிழா

காலை 10.00 மணிக்கு விநாயகப் பெருமான் , முருகப் பெருமான், ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆகிய மூர்த்திகள் அழகிய மூன்று சித்திரத் தேர்களில் ஆரோகணித்து வலம் வரும் கண்கொள்ளாக் காட்சி இடம்பெறும்.

## தீர்த்தத் திருவிழா

01.05.2026 சித்திரா பௌர்ணமி தினமான வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு சமுத்திர தீர்த்தம் நடைபெறும்.

**திருவிழாக் காலங்களில் தினமும் மகேஸ்வர பூஜை (அன்னதானம்) நடைபெறும்.**

கண்ணகைபுரம், புங்குடுதீவு-10
தொ.பே: 021 315 6666, 077 717 4279
வெப்: www.kannakaiamman.com
ஈ-மெயில்: temple@kannakaiamman.com

இவ்வண்ணம்: ஆலய பரிபாலன தர்மகர்த்தா சபையினர்
ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம்

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அம்பாள்புரம் தமிழ் வித்திக்கு ரவிகரன் எம்.பி. நிதி ஒதுக்கீடு!

முல்லைத்தீவு, ஏப்.28

முல்லைத்தீவு - துணுக்காய் வலயக்கல்விப் பணிமனையின் கீழுள்ள அம்பாள்புரம் தமிழ் வித்தியாலயத்துக்கு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தனது 2026ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து 2 இலட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளார்.

பாடசாலைச் சமூகத்தின் கோரிக்கைக்கு அமைவாக, அம்பாள்புரம் தமிழ் வித்தியாலயக் கட்டடத்துக்கு தீந்தை பூசுவதற்கு இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்தநிலையில் குறித்த பாடசாலைக்குச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் பாடசாலையில் காணப்படும் வளப்பற்றாக்குறைகள் தொடர்பில் அண்மையில் நேரில் சென்று ஆராய்ந்தார். (ச-246)


## மரண அறிவித்தல்

தோற்றம் 15 . 04 . 1945



மறைவு 27 . 04 . 2026

(CS/31692) J-1

### மூத்ததம்பி சின்னத்தம்பி

குப்பிளான் தெற்கு, குப்பிளானைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மூத்ததம்பி சின்னத்தம்பி அவர்கள் நேற்று (27.04.2026) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மூத்ததம்பி - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தில்லைநாதன் - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், வேவியின் அன்புக் கணவரும், கணேசலிங்கம் (கொலண்ட்) அவர்களின் மைத்துனரும், ராஜ்சதீஸ் (லண்டன்), சோதீஸ்வரன், கமலேஸ்வரன், பிரசாந்தி, சுபாகரன் (சிவா) ஆகியோரின் அன்புத் தந்தையும், அனுஷா (லண்டன்) தசிந்தா, கஜனி ஆகியோரின் மாமனாரும், சண்விகா, அத்விகா, ஆரிக்கா, ஜகர்வின், கர்விகா, ஜஸ்மிகா, கனிஸ் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (28.04.2026) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக குப்பிழான் தெற்கு கடாகடம்பை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்வும்.

தகவல்: குடும்பத்தினர்
குப்பிழான் தெற்கு, குப்பிழான்
077 517 2723

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 17 . 04 . 1967



மறைவு 09 . 05 . 2025

### சங்கரப்பிள்ளை ஸ்ரீஸ்கந்தராஜா

தம்பி ! தம்பி ! என்று தினம் தினம்
அழைத்த குரல் ஓய்ந்து ஒரு வருடம்
ஆனாலும் உங்கள் நினைவுகள்
என்றும் எம் உள்ளத்தில்
உயிர்ப்புடன் அப்பா!

கோயில் வாசல் வீதி,
இணுவில்.

(cs.61300) (N-1)

உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

## நினைவஞ்சலிகள்

16ஆம் ஆண்டு — 10ஆம் ஆண்டு

பிறப்பு 18.06.1936
இறப்பு 10.05.2010





பிறப்பு 21.07.1936
இறப்பு 30.11.2016

செல்லத்துரை சக்கரவர்த்தி
திதி: துவாதசி

சக்கரவர்த்தி இராஜலக்சுமி
திதி: பிரதமை

அன்பாலும், பண்பாலும், பாசத்தாலும்
எங்களை வழிநடத்தி நலமுடன் வாழ வைத்திருக்கும்
எம் ஆருயிர்த் தெய்வங்களே!
உங்களை இந்நாளில் நினைவு கூறுகின்றோம்
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

குடும்பத்தினர்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
075 777 6522

(cs.31679) (N-1)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேஷ்டி வீட்டுக்கிரியையும்

தோற்றம் 29 . 08 . 1941



மறைவு 30 . 03 . 2026

### அமரர் கல்யாணசுந்தரம் சக்திவேல்

(பிரபல ரேடியோ, ரீவி திருத்துனர்)

அவர்களின் அந்தியேஸ்டி வீட்டுக்கிரியைகள் நாளை (29.04.2026) புதன்கிழமை காலை எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.


சோடா கம்பனி ஒழுங்கை,
ஊரிக்காடு, வல்வெட்டித்துறை.

குடும்பத்தினர்

(cs.61324) (N-1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# புதர்களுக்குத் தீ வைத்த விஷமிகள்



யாழ்ப்பாணம், ஏப்.28

அல்லைப்பிட்டி மண்கும்பான் இடையே நண்டுத் தொழிற்சாலையின் முன்பகுதியிலுள்ள தரிசுக் காணிகளில் காணப்பட்ட புதர்களுக்கு விசமிகள் தீ மூட்டியதில் பெருமளவான புற்றரைகள் எரிந்து நாசமாகியுள்ளன. இந்தச் சம்பவம் நேற்றுக் காலை நடந்துள்ளது. தீயால் ஏற்பட்ட புகை காரணமாக வீதியால் மக்கள் செல்ல முடியாத நிலையும் உருவானது.

இதுதொடர்பில் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தப்பட்டதை அடுத்து, யாழ். மாநகரசபையின் தீயணைப்பு வாகனம் வரவழைக்கப்பட்டு தீயைக் கட்டுப்படுத்த துரித நடவடிக்கை எடுக்கப்பட்டது. தற்போது நிலவும் வெப்பமான காலநிலையால் நீர்வளம் வேகமாக வற்றி வரும் நிலையில் புற்களும் சருகாகிவருகின்றன. அதனால் கால்நடைகளின் உணவுத்தேவையை நிவர்த்திசெய்யும் புற்றரைகளும் குறைந்துவரும் நிலையில் இவ்வாறு விசமத்தனமாக தீ மூட்டல்களால் அவை முற்றாக அழிவுறும் நிலைமை ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. (எ-27)

# புத்தாண்டு விழாவில் பொலிஸ் உயிரிழப்பு

வலஸ்முல்ல, போவல பகுதியில் நடைபெற்ற சித்திரை புத்தாண்டு விழாவின் இறுதியில் ஏற்பட்ட மோதலில் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வந்த பொலிஸ் அதிகாரி ஒருவர் உயிரிழந்துள்ளார். மாளிகாவத்தை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வந்த, வலஸ்முல்ல பகுதியைச் சேர்ந்த 46 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பாக வலஸ்முல்ல பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர். (ச-இ)

## பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் கொழும்புத்துறையில் வதியும் நந்தகுமார் கலைச்செல்வி ஆகிய நான் எனது பெயரை நந்தகுமார் டயானா என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் நந்தகுமார் டயானா என்றே கையொப்பமிட்டு பயன்படுத்துவேன் என்று இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு தெரிவிக்கின்றேன்.

நந்தகுமார் டயானா

## யாழ்ப்பாணம் மாநகர சபை
## குருநகர் கோழி இறைச்சிக்கடை, குருநகர் ஆட்டிறைச்சிக்கடை, பழையபூங்கா சிற்றுண்டிச்சாலை என்பவற்றுக்கான கேள்வி அறிவித்தல், பண்ணை கடற்கரைப்பூங்கா மலசலகூடத்தொகுதி பராமரித்தலுக்கான மீள்கேள்வி அறிவித்தல் - 2026, (15.05.2026 - 31.12.2026)

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி நிலையங்கள் குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்வி யாழ்ப்பாணம் மாநகரசபையால் கோரப்படுகின்றது.

கேள்விப் படிவக் கட்டணம் - ரூபா 1.180.00 (வற் வரியுடன்)
கேள்விப் படிவம் விநியோகித்தல் - 28.04 .2026 - 11.05.2026 (மு.ப 9.00 - பி.ப.2.30 மணி வரை)
கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளல் - 12.05.2026 மு.ப 10.00 மணி வரை
கேள்வி திறத்தல் - 12.05.2026 மு.ப 10.00 மணிக்கு

1. விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் நிலையத்தின் பெயர் குறிப்பிடப்பட்டு மாநகரசபை நானாவித இறைவரிப் பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். அல்லது 12.05.2026 ம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பித்தல் வேண்டும்.
2. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் ஒருவர் சமுகமளிக்கவேண்டும்.
3. கேள்வி விண்ணப்பம் பெறுபவர் தேசிய அடையாள அட்டைப்பிரதி மற்றும் வதிவிடத்தை உறுதிப்படுத்தும் கிராமசேவை உத்தியோகத்தரது கடிதம் என்பவற்றை சமர்ப்பிக்க வேண்டும்.
4. கேள்வியை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்பதற்கும் நிராகரிப்பதற்கும் கேள்விச்சபைக்கு அதிகாரம் உண்டு.
5. **குத்தகை தொடர்பான நிபந்தனைகள் கேள்விப்படிவத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. அதனை யாழ் மாநகர சபை நானாவித இறைவரிப்பகுதியின் விளம்பரப்பலகையிலும் பார்வையிடமுடியும்.**
6. **கேள்வியில் சித்திபெற்றவர் குத்தகையின் 1/3 வைப்புப்பணத்தை 14.05.2026 ம் திகதி பி.ப 2.30 மணிக்கு** முன்னர் செலுத்தப்பட வேண்டும்.

| இல | விபரம் | இல | பிணைப்பணம் | ஆரம்ப கேள்வித்தொகை (15.05.2026 – 31.12.2026) |
|---|---|---|---|---|
| 1 | குருநகர் கோழி இறைச்சிக்கடை | இல 03 | 7,000.00 | 943,548.39 |
| 2 | குருநகர் ஆட்டு இறைச்சிக்கடை | இல 05 | 7,000.00 | 754,838.71 |
| 3 | பழைய பூங்கா சிற்றுண்டிச்சாலை | | 10,000.00 | 761,758.07 |
| 4 | பண்ணை கடற்கரைப்பூங்கா மலசலகூடத்தொகுதி | | சித்திபெற்ற கேள்வித்தொகையின் 5% செலுத்தப்பட வேண்டும் | 62,903.22 |

**முதல்வர்.**
**யாழ் மாநகர சபை.**
**யாழ்ப்பாணம்.**

THE HALO TRUST

450 Thirunagar West
Kilinochchi
Sri Lanka

T: +94 (0) 212 285 466
vanni@halosrilanka.org
mail@halosrilanka.org
www.halotrust.org

## Vacancy Advertisement for Spare Parts Storeman

The HALO Trust is the world's largest and oldest international humanitarian mine action non-government organization (NGO). For over thirty years, we have been saving lives and helping war-torn communities recover by making their land safe. Our mission is to protect lives and restore the livelihoods of those affected by conflict.

HALO has been working in Sri Lanka since 2002 and now has over 570 staff working in the Northern Province with offices in Jaffna, Kilinochchi and Mullaitivu. To date, HALO has safely destroyed over one million items of explosive ordnance, including more than 300,000 anti-personnel landmines. HALO and other mine action stakeholders are working to clear Sri Lanka of all known contamination by 2028 to meet Sri Lanka's obligations as a state party to the Anti-Personnel Mine Ban Convention.

We are seeking to recruit a **Spare Parts Storeman** who will be responsible for supporting the effective management of Logistics process. The selected candidate will assist in ensuring that all spare parts processes are carried out efficiently, accurately, and in a timely manner, maintaining high standards of quality and accountability.

**Spare Parts Storeman's Responsibilities are.**

- Maintain stores and minimum stock levels and submit timely requests to the Logistics Manager for spares and lubricants.
- Record stock movements
- Track the condition of items
- Issue fuel and lubricants to operational staff.
- Issue spares and tyres to the workshop.
- Prepare, conduct, and record write-offs.
- Prepare job sheets and update the store log sheets on a daily basis.
- Coordinate with Workshop Manager to ensure that necessary items are available to the workshop.
- Providing daily issue sheets to the Data Entry Operator to updates in the database
- Carry out regular store checks
- Carry out monthly write-off in collaboration with Logistics Manager and interna tional staff.
- Any other duties as specified by the Fleet manager or international staff.

QUALIFICATIONS AND COMPETENIES:

- Minimum A/L (or equivalent secondary education)
- Basic technical or mechanical knowledge is useful (especially for spare parts han dling)
- 2–3 **years' experience** in storekeeping, warehouse, or spare parts handling.


- Knowledge of:
  - o **Inventory / stock control systems** (manual or computerized)
  - o Spare parts identification and coding
  - o Store procedures (stock registers)
- Basic **computer skills** (MS Excel, Word, inventory systems.

All applications must be submitted to the address below no later than May 05 , 2026 either by Post or via email below. "If there is a sufficient caliber of applicants, we reserve the right to close the role earlier than the date noted." Only successful applications will be contacted. For further information, please contact 021 228 5466. HALO encourages applicants from all backgrounds to apply for this role. We especially welcome applications from female candidates.

HR Manager
The HALO Trust,
450 Thirunagar West, Kilinochchi
[illegible]@halosrilanka.org

(cr.47451) (N-1)

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media



அமெரிக்க அதிபர்

# ட்ரம்பை இலக்குவைத்து மீண்டும் துப்பாக்கிச்சூடு!

## பலத்த பாதுகாப்புடன் தப்பினார்

**வொஷிங்டன், ஏப். 28**

**அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்பை இலக்கு வைத்து நேற்று அதிகாலை துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது. வெள்ளைமாளிகைப் பத்திரிகையாளர்களின் விருந்து விழா ஹில்டன் நட்சத்திர விடுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதில், அமெரிக்க அதிபர் ட்ரம்ப் மற்றும் முதற்பெண்மணியான மெலனியா ட்ரம்ப் ஆகியோரும் கலந்துகொண்டனர்.**

இதன்போது, நபரொருவர் நிகழ்வு இடம் பெற்ற பகுதிக்குள் அத்துமீறி நுழைவதற்கு முற்பட்டுள்ளார்.

எனினும், அது இயலாமற்போனதைத் தொடர்ந்து துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளார். இதில் பாதுகாப்பு அதிகாரியொருவர் காயமடைந்தார். இதையடுத்து அதிபர் ட்ரம்பும், மெலனியா ட்ரம்பும் உச்சக் கட்டப் பாதுகாப்புடன் வெளியேற்றப்பட்டனர். துப்பாக்கிச்சூடு நடத்திய ஆயுததாரி கைது செய்யப்பட்டுள்ளநிலையில் அவரிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன. கலிபோர்னியாவைச் சேர்ந்த தோமஸ் ஆலன் என்ற அமெரிக்கரே அதிபர் ட்ரம்பைக் கொல்வதற்கு முயன்றுள்ளார் என்று முதற்கட்ட விசாரணைகளின் அடிப் படையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏனைய தகவல்கள் தொடர்பில் இரகசியம் பேணப்படுகின்றன. (ம)

# அமைதிப் பேச்சுவார்த்தை இறுதிக் கணத்தில் ரத்து!

## பின்வாங்கியது அமெரிக்கா

வொஷிங்டன், ஏப். 28

ஈரான் அமெரிக்கப் பிரதிநிதிகளுக்கு இடையில் பாகிஸ்தானில் நேற்று நடைபெறவிருந்த பேச்சுவார்த்தை கடைசி நேரத்தில் இரத்துச் செய்யப்பட்டுள்ளது. மத்திய கிழக்கில் அமைதியை ஏற்படுத்துவது தொடர்பில் ஈரான் பாகிஸ்தான் பிரதிநிதிகள் கடந்த இரண்டு நாள்களாகப் பேச்சுவார்த்தை நடத்தி வந்தனர். இதன் தொடர்ச்சியாக ஈரான் அமெரிக்கப் பிரதிநிதிகளுக்கு இடையில் நேரடிப் பேச்சுவார்த்தை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இவ்வாறான நிலையிலேயே, கடைசி நேரத்தில் அந்தப் பேச்சுவார்த்தை இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் அதிபர் ட்ரம்ப் தெரிவித்ததாவது:- ஈரானியத் தலைவர்களுக்கு மத்தியில் அதிகார மோதல்கள் உள்ளன. அவர்களில் எவரும் தீர்மானங்களை எடுக்கும் நிலையில் தற்போது இல்லை. எனவே, எமது பிரதிநிதிகள் இந்தப் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்வது நேரத்தை வீணாக்கும் செயலாக அமையுமே தவிர, இதில் நன்மைகள் இருக்காது என்றார். பேச்சுவார்த்தை இரத்துச் செய்யப்பட்டமைக்கு ஈரானின் வெளிவிவகார அமைச்சர் அப்பாஸ் அரக்சி கடும் கண்டனம் விடுத்துள்ளார். பேச்சுவார்த்தை மூலம் தீர்வைக் காண்பதில் அமெரிக்காவுக்கு விருப்பம் இல்லை என்பதையே இந்த நடவடிக்கை வெளிப்படுத்துகின்றது என்றும் அவர் கூறியுள்ளார். (ம)

# தமிழக அரசியலை இனி நாங்களே தீர்மானிப்போம்

## த.வெ.க. முழக்கம்

சென்னை, ஏப். 27

ஸ்டாலினாலும், உதயநிதியாலும் இனி தமிழக அரசியலைத் தீர்மானிக்க முடியாது. மாறாக நாமே தீர்மானி ப்போம் என்று தமிழக வெற்றிக் கழக பொதுச்செயலர் நிர்மல்கு மார் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:- ஸ்டாலினுக்கும் உதய நிதிக்கும் நிரந்தர ஓய்வை வழங்கும் வகையிலேயே தேர்தல் முடிவுகள் அமையும். இனி அவர்களால் தமிழக அரசியலைத் தீர்மானிக்க முடியாது. தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் 85 வீதமான மக்கள் வாக்களித்தமைக்கு தமிழக வெற்றிக் கழகத்தின் உதயமே காரணம். தேர்தல் தினமன்றும், அதற்குப் பின்னரும் தி.மு.க.வினர் வன்முறைகளில் ஈடுபட்டுள்ளனர். தோல்வி பயமே இதற்கெல்லாம் காரணம். தி.மு.க.வின் வன்முறைகள் தொடர்பில் முற்றுமுழுதாக விசாரணை செய்யப்படும்-என்றார். (ம)

## 31ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 11 . 11 . 1944

மறைவு 29 . 03 . 2026

**அமரர் திருநாவுகரசு நிற்குணரெட்டினம்**

மாமா நீங்கள் அம்மாவுக்கு
தம்பியாக இருந்தாலுலும் என்னை
உங்கள் குழந்தைபோல் அரவணைத்து
வளர்த்தீர்கள் என் கண்களோ
உங்களைத் தேடுகின்றன உங்களை
நினைத்து எனது கண்ணீரை காணிக்கைய்க்கின்றேன்
உங்கள் ஆத்மா சாந்தி அடைய
இறைவனை பிரார்த்திக்கின்றேன் என்றும்
உங்கள் நினைவுகளுடன் வாழ்ந்திருக்கும்

மருமகன்
தி. சத்தியகுமார் (ரூபன்)
076 222 6807

இல.62 கொழும்புத்துறை வீதி,
பாண்டியன்தாழ்வு

(CS/31695) J-1

## 14ம் ஆண்டு ஞாபகார்த்தம்



பிறப்பு 16 . 06 . 1946

இறப்பு 28 . 04 . 2014

**அமரர் புண்ணியமூர்த்தி வேலும்மயிலும்**

இயற்கை முதலாய் ஒளி வீசிநீரே !
இன்று இயற்கை எய்தியதால் செயற்கை கண்டு பிரமித்து நிக்கின்றோம்.
இந்திரன் முதலான என்டிசை தேவரும் எம்முடன் சேர்ந்து வாழ்த்தி
வணங்கி நிற்பதை ஆர் அறிவார் !
பொன்னொளி வீசிய அக்காலங்கள்
புத்துணர்வு ஊட்டிய அந்நாட்கள் இன்று உள்ளுணர்வு ஊட்டுகின்றன.
ஐயா!!!! உந்தனை போல தலைவர் யாரும் இல்லையே !
அறிவோம் உம் தியாகத்திற்கு அளவே இல்லை.
உறுதியோடும் இன சன பந்துவோடும் எத்தகை இடர் வரினும் இலகு வழி காட்டி வாழ வைத்தீரே !
எண்ணங்கள் ஆயிரம் இவருக்குள் இருந்த போதும் பெரிய வளவு முருகன் மணியோசையுடன் யாவையும் மறந்து உம் கை கூம்பி விடுமே ஐயா!
ஆயிரம் உறவுகள் சூழ்ந்து நிக்கிறன உமக்கு ஈடகவில்லையே ஐயா!

பிரான்பற்று,
பண்டத்தரிப்பு.

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேராவில் தமிழ் வித்தியில் நிலவும் பல குறைபாடுகள்

## நேரில் ஆராய்ந்தார் ரவிகரன் எம்.பி.




**முல்லைத்தீவு, ஏப்.28**

**விசுவமடு, தேராவில் தமிழ் வித்தியாலயத்தில் நிலவும் பல்வேறு குறைபாடுகள் தொடர்பில், நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேரில் ஆராய்ந்தார்.**

ஆசிரிய ஆளணிப்பற்றாக்குறை, பாடசாலைச் சுற்றுவேலிச் சீரமைப்பு, 10 ஆண்டுகளுக்கு மேலாக முழுமைப்படுத்தப்படாமல் ஆபத்தான நிலையிலுள்ள பாடசாலையின் பிரதான மண்டபம், தரம் 6 மாணவர்களுக்கு வகுப்பறைக் கட்டடம் இன்மை, பாடசாலைச் சூழலுக்கு ஆபத்துக்களை ஏற்படுத்துகின்ற விதத்தில், பாடசாலைக்கு முன்பாகவுள்ள காட்டுப்பகுதி, மாணவிகளுக்குப் போதுமான கழிப்பறை வசதியை ஏற்படுத்தல், அலுவலக உதவியாளர் தேவை, கழிப்பறைகளைச் சீரமைத்தல், மைதானச் சீரமைப்பு, வெளிமாவட்ட ஆசிரியர்கள் தங்குவதற்கான விடுதி வசதியை ஏற்படுத்தல், போதுமான தளபாடங்களைப் பெற்றுக் கொடுத்தல், திறன்வகுப்பறை மற்றும் கணனி அறை, விளையாட்டு அறை வசதிகளை பாடசாலையில் ஏற்படுத்துதல் உள்ளிட்ட பல கோரிக்கைகளை பாடசாலை சமுகத்தினர் இதன் போது நாடாளுமன்ற உறுப்பினரிடம் முன்வைத்தனர்.

பாடசாலைச் சமூகத்தினரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள், குறைபாடுகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் உறுதியளித்தார். (க-246)



# பா.ஜ.க.வின் கைக்கூலியாக இந்தியத் திணைக்களங்கள்

## போட்டுத் தாக்குகின்றது காங்கிரஸ்

சென்னை, ஏப். 28

தேர்தல் நாள்களில் அரச திணைக்களங்கள்மூலம் தமக்கு நெருக்கடி வழங்கப்பட்டதாக, காங்கிரஸ் கட்சியின் தமிழகத் தலைவர் செல்வப்பெருந்தகை குற்றஞ் சாட்டியுள்ளார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் தொடர்பில் செல்வப்பெருந்தகை விசேட ஊடக சந்திப்பை நடத்தியுள்ளார். இதன்போதே, தேர்தல் நாள்களில் அரச திணைக்களங்கள் மூலம் தமக்குக் கடும் நெருக்கடி வழங்கப்பட்டது என்று குற்றஞ்சாட்டியுள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பா.ஜ.க.வின் விருப்பத்துக்கு ஏற்பவும், பா.ஜ.க.வின் ஆட்சியைத் தக்கவைக்கும் நோக்குடனுமே பல அரச திணைக்களங்கள் தற்போது செயப்பட்டுவருகின்றன. தமிழகத்தில் காங்கிரஸ் கட்சித் தலைவர்களின் வீடுகளை இலக்குவைத்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையும் அத்தகை நோக்கின் அடிப்படையில் அமைந்தவையே. பா.ஜ.க.வின் ஊதுகுழலாகச் செயற்படுவதை அரச திணைக்களங்கள் கைவிடவேண்டும். அரச திணைக்களங்களைப் பயன்படுத்தினாலும் பா.ஜ.க.வால் தமிழகத்துக்குள் நுழையமுடியாது என்பதே உண்மை-என்றார். (ம)


# மாகாணசபைத் தேர்தலுக்காக இணையும் அரசியற் கட்சிகள்

யாழ்ப்பாணம், ஏப்.28

மாகாணசபைத் தேர்தலை விரைவாக நடத்துவதற்கு, அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கும் நோக்குடன், வடக்கையும், தெற்கையும் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியற்கட்சிகள் ஒன்றிணையவுள்ளன.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், இலங்கை தமிழரசுக் கட்சியினர் மற்றும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் ஆகியோருக்கிடையில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற சந்திப்பில், இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. ஆட்சிக்கு வந்து ஓராண்டு காலத்துக்குள் மாகாணசபைத் தேர்தலை நடத்துவதாகத் தேசிய மக்கள் சக்தி வழங்கிய வாக்குறுதியை இதுவரை நிறைவேற்றவில்லை. அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தின் ஊடாக உள்வாங்கப்பட்டுள்ள மாகாண சபை முறைமையை முழுமையாக இயங்கச் செய்வது அவசியம். அதனால் இரு தரப்பினரும் ஒன்றிணைந்து போராட்டங்களை முன்னெடுக்கவேண்டும் என்று கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.


அதேவேளை முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையிலான சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் முன்னெடுப்புகள், எதிர்காலத்தில் அந்த அமைப்புடனும் இணைந்து அரசாங்கத்தின் மீது பலமான அழுத்தங்களைப் பிரயோகித்தல் தொடர்பிலும் ஆராயப்பட்டது. (க-இ)



# கடற்றொழில் சட்டங்கள்; மீனவர்களுக்கு கருத்தரங்கு

மன்னார்,ஏப்.28

மன்னார் சமூகப் பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில், கடற்றொழில் சட்டங்கள் மற்றும் மீன்பிடி தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு முழங்காவில் டொன் பொஸ்கோ தொழிற்பயிற்சி மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. மாந்தை மேற்குப் பிரதேசத்துக்குட்பட்ட வெள்ளாங்குளம், தேவன்பிட்டி, மூன்றாம்பிட்டி மற்றும் பள்ளிக்குடா ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 50க்கும் மேற்பட்ட மீனவர்கள் இதில் பங்கேற்றனர். இதன்போது கடற்றொழில் சட்டங்கள் மற்றும் மீன்பிடி முறைமைகள், கடல் வளங்களை பாதுகாத்தல் தொடர்பாக மீனவர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது. மெசிடோ நிறுவனத்தின் இணைப்பாளர் ஜான்சன் மற்றும் கிளிநொச்சி மாவட்டத்துக்கான இணைப்பாளர் விவேகி, மெசிடோ நிறுவனத்தின் பதவி நிலை உத்தியோகத்தர்கள் மற்றும் வளவாளர்கள் கலந்துகொண்டனர். (க-55)



வரலாற்றுப் பிரசித்திபெற்ற வல்வெட்டித்துறை அருள்மிகு முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்தப் பெருவிழாவின் எட்டாம் நாள் இரவு உற்சவமாக வேட்டைத் திருவிழா கடந்த வெள்ளிக்கிழமைபக்திபூர்வமாக இடம் பெற்றது. புலி உருவ மின் அலங்காரங்கள் வீதியின் இருமருங்கிலும் வரவேற்க முத்துமாரி அம்மன் பவனி வந்து பக்தர்களுக்கு அருட்காட்சி கொடுத்தார். (ச-100)



# வலய மட்ட வலைப்பந்தாட்டப் போட்டியில் வடமராட்சி இந்து மகளிர் அணி சம்பியன்!

யாழ்ப்பாணம்,ஏப்.28

வடமராட்சி கல்வி வலயத்துக்கு உட்பட்ட பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. போட்டிகள் வதிரி திரு இருதயக் கல்லூரியில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றன. இதில் 16 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான இறுதியாட்டத்தில், வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து, பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி மோதியது.

பரபரப்பான ஆட்டத்தில் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி அணி 17:14 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. மூன்றாம் இடத்தை வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி அணி பெற்றது. (க-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோத்தாபயவின்...

2011ஆம் ஆண்டு மனித உரிமைகள் தினமான டிசெம்பர் மாதம் 10ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான போராட்டத்தை ஒழுங்கமைப்பதில் ஈடுபட்டிருந்த லலித்குமார் வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் ஆகியோர் காணாமல் ஆக்கப்பட்டனர். இது தொடர்பான வழக்கில், கடந்த 2017 ஆம் ஆண்டு முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தாபாய ராஜபக்சவின் பெயரும் இணைக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து நடைபெற்ற வழக்கு விசாரணைகளின்போது, கோத்தாபாய ராஜபக்சவை மன்றில் தோன்றி சாட்சியமளிக்குமாறு உத்தரவிடப்பட்டது. எனினும், பாதுகாப்புக் காரணங்களுக்காக தன்னால் யாழ்ப்பாணம் செல்லமுடியாது என்று கோத்தாபய ராஜபக்ச கூறியிருந்தார்.

சாட்சியம் வழங்குவதற்காக யாழ்ப்பாணத்துக்கு வரமுடியாது என்றால், அது தொடர்பில் சத்தியக் கடதாசியும், எழுத்துமூல சமர்ப்பணம் வழங்குமாறு நீதிமன்றம் அறிவுறுத்தல் வழங்கியது. அவை கோத்தாபய தரப்பால் வழங்கப்பட்டுள்ளன. இதையடுத்தே, காணாமல் ஆக்கப்பட்ட லலித் மற்றும் குகன் ஆகியோர் தொடர்பான வழக்கில், கோத்தாபய ராஜபக்சவின் சாட்சியத்தை எத்தகைய முறையில் பெறுவது என்பது தொடர்பான கட்டளை இன்று வழங்கப்படவுள்ளது. (அ-ம-26)

## செம்மணிப்...

யாக இடம்பெறவுள்ளன. செம்மணி மனிதப் புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகளை நேற்றையதினம் ஆரம்பிப்பது என்று நீதிமன்றம் ஏற்கனவே தீர்மானித்திருந்தது. இதன்படி, நீதவான் எஸ். லெனின் குமார் முன்னிலையில் நேற்றுக் காலை வழக்கு அழைக்கப்பட்டு அதைத் தொடர்ந்து அகழ்வுப் பணிகள் இடம்பெற்றன.

புதைகுழியை அடையாளப்படுத்தி மூடப்பட்டிருந்த மண்ணை அப்புறப்படுத்தும் நடவடிக்கைகளே நேற்று இடம்பெற்றன. இன்றையதினம் தொடர்ச்சியான அகழ்வுப் பணிகள் இடம்பெறவுள்ளன. (அ-ம-26)

## நாட்டில்...

களில் குறிப்பாக, மேல், சப்ரகமுவ, மத்திய, வடமத்திய, ஊவா மற்றும் வடமேல் மாகாணங்களிலும் அநுராதபுரம் மாவட்டத்தின் சில பகுதிகளிலும் நேற்றுக் கனமழை பதிவாகியுள்ளது. இந்த மழையுடனான கால நிலை இன்றும் தொடரும்.

தற்போதைய வானிலை நிலவரத்தின் அடிப்படையில், 16 மாவட்டங்களுக்கு மின்னல் தாக்கம் தொடர்பில் சிவப்பு எச்சரிக்கையும், 9 மாவட்டங்களுக்கு மஞ்சள் எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது. இடியுடன் கூடிய மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் பலத்த காற்று வீசக்கூடும் என்பதால், மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைத்துக்கொள்ள பொது மக்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியம் - என்றுள்ளது. (அ-ம)

## குளத்தில்...

டைய குடும்பத்தலைவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

கிளிநொச்சி கனகாம்பிகைக்குளத்தில் நேற்றுமுன்தினம் மாலை மூவர் நீராடச்சென்ற நிலையில், அவர்களில் ஒருவர் காணாமற்போயிருந்தார். நேற்றுமுன்தினம் இரவுவரை அவர் மீட்கப்படாத நிலையில், இன்று காலை இடம்பெற்ற தேடுதல் நடவடிக்கையின் போதே அவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. (அ-ம-113)

## ஆளுநரின்...

ணைக்கு எடுத்த பின்னரே நீதிமன்றம் இந்த உத்தரவை வழங்கியுள்ளது.

பருத்தித்துறை நகரசபைக்குட்பட்ட மரக்கறிச் சந்தையை இடம் மாற்றுவதற்கு சபை மேற்கொண்ட தீர்மானம் உள்ளிட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, தவிசாளர் மற்றும் உறுப்பினருக்கு எதிராக விசாரணை நடத்த முன்னாள் மாவட்ட நீதிபதி க. அரியநாயகம் தலைமையில் விசாரணைக்குழு ஒன்று கடந்த மாதம் 12ஆம் திகதி அமைக்கப்பட்டிருந்தது.

இந்த விசாரணைக்குழு முன்னிலையில் கடந்த 21ஆம் திகதி முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்ட நிலையில், ஆளுநரின் நடவடிக்கைக்கு எதிராக மனுதாரர்கள் நீதிமன்றத்தை நாடியிருந்தனர்.

மனுதாரர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி கலாநிதி குமாரவடிவேல் குருபரன், நகரசபையின் ஜனநாயகத் தீர்மானங்கள் குறித்து விசாரணை நடத்த முடியாது என்றும், இது நகரசபைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் குற்றமாகாது என்றும் வாதிட்டார். அத்துடன் விசாரணைக்குழு தொடர்பான அறிவித்தல், வர்த்தமானியில் வெளியாக முன்னர், நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி அதனைச் சமூக வலைத்தளங்களில் பகிர்ந்து கருத்துத் தெரிவித்திருந்தமையைச் சுட்டிக்காட்டிய சட்டத்தரணி, இந்த விசாரணை நடவடிக்கை அரசியல் உள்நோக்கம் கொண்டது என்றும் தவிசாளரை பதவியிலிருந்து நீக்கும் முயற்சி எனவும் வாதிட்டார்.

குறிப்பாக, அகில இலங்கை தமிழ்க் காங்கிரசின் (தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி) ஆளுகைக்குட்பட்ட பருத்தித்துறை மற்றும் சாவகச்சேரி நகரசபைகளை இலக்கு வைத்து இவ்வாறான விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக மனுதாரர் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டது. சட்டத்தரணியின் வாதங்களை ஏற்றுக்கொண்ட மேல் நீதிமன்ற நீதிபதி அலெக்ஸ் ராஜா, மனுதாரர்களின் வாதங்களில் முகாந்திரம் இருப்பதாகக் கருதி, இந்த வழக்கு விசாரணை நிறைவடையும் வரை தவிசாளர் மற்றும் உறுப்பினருக்கு எதிரான விசாரணைகளை முன்னெடுக்கக் கூடாதென இடைக்காலத் தடைவிதித்து உத்தரவிட்டார்.

மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணிகள் பெனார்சி பிரதீபன், சி. அபினாஸ் ஆகியோரின் அனுசரணையுடனேயே கலாநிதி கு. குருபரன் முன்னிலையாகியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26-100-66)

## அர்ச்சுனா...

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

யாழ்ப்பாணம் - பெரியவிளான் பகுதியில் உள்ள காணி ஒன்றின் உரிமை தொடர்பாக மல்லாகம் நீதிமன்றில் வழக்கு இடம்பெற்று வருகிறது. அந்தக் காணியைத் தூய்மைப்படுத்தும் பணியில் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா ஈடுபட்டு வருகின்றார். இதன்போது, தமது வேலி சேதப்படுத்தப்பட்டதாக பெண்ணொருவரும், அவரின் சகோதரனும் அர்ச்சுனா எம்.பி.யுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளனர். வாக்குவாதம் முற்றிய நிலையில், அச்சுனா எம்.பி. மீது குறித்த பெண் கல்லால் தாக்குதல் நடத்தினார் என்றும், அதற்கு அர்ச்சுனா துப்பாக்கியைக் காண்பித்து மிரட்டினார் என்றும் கூறப்படுகின்றது. இதன்பின்னர் சம்பவ இடத்துக்குச் சென்ற இளவாலைப் பொலிஸார் இருதரப்பையும் சமாதானப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

அதன்பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா வழங்கிய முறைப்பாட்டுக்கு அமைய அந்தப் பெண் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுக்கு அமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டார். இதற்கிடையில் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா கொலைமிரட்டல் விடுத்த வீடியோ வெளியாகி சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. இளவாலைப் பொலிஸாரால் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா விசாரணைக்காக அழைக்கப்பட்டு கைது செய்யப்பட்டார். மல்லாகம் நீதிமன்ற உத்தரவுக்கு அமைய நாளை வரை அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அவருக்கு எதிராக, அத்துமீறி நுழைந்தமை, அச்சுறுத்தியமை மற்றும் துப்பாக்கிக் கட்டளைச் சட்டம் ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. அர்ச்சுனா எம்.பி.க்கு வழங்கப்பட்ட துப்பாக்கி நீதிமன்றின் கட்டுப்பாட்டின் கீழ் சான்றுப்பொருளாக வைக்கப்பட்டுள்ளது. (அ-ம-26)

## விகாரைத்...

காணிகளை மக்களுக்கு வழங்குவதில் உறுதியாக உள்ளோம். தையிட்டி விகாரையை மையப்படுத்தி அரசியல் செய்வதற்கான எந்தத் தேவையும் எமக்கு இல்லை. தையிட்டி விகாரையை வைத்து போலியான கருத்துகளைத் தெரிவித்து குழப்பங்களை அதிகரிக்கும் வகையிலேயே சிலர் செயற்பட்டு வருகின்றனர். தமது அரசியல் இலாபத்துக்காகப் பதற்றத்தை உருவாக்குகின்றனர். தேவையற்ற பதற்றங்களை ஏற்படுத்த வேண்டாம் என்றும், பொறுப்புடன் செயற்படுமாறும் அவர்களைக் கோருகின்றோம். விகாரைக்கு அபகரிப்பதற்காக திஸ்ஸ விகாரைக் காணிகள் அளவீடு செய்யப்படவில்லை. காணிகளை விடுவித்து பிரச்சினையை சுமுகமாகத் தீர்ப்பதற்காகவே இந்தக் காணிகள் அனைத்தும் விடுவிக்கப்படுகின்றன - என்றார். (அ-ம-26)

## தையிட்டிக்...

கடந்த 17ஆம் திகதி அளவீட்டுப் பணிகள் நடைபெறவிருந்தன. எனினும், திஸ்ஸ விகாராதிபதி எதிர்ப்பு வெளியிட்ட நிலையில், அந்தப் பணிகள் அனைத்தும் கைவிடப்பட்டன. இதையடுத்தே, தொடர்புடைய அனைத்துத் திணைக்களங்களுக்கும் தகவல் வழங்கப்பட்டு இன்றையதினம் மீள அளவீட்டுப் பணிகள் இடம்பெறவுள்ளன. அளவீட்டுப் பணிகள் தொடர்பில், காணிகளின் உரிமையாளர்களுடன் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் நேற்று நேரில் கலந்துரையாடல் நடத்தியுள்ளார் என்றும் தெரியவருகின்றது.

இதேவேளை, காணிகளை அளவீடு செய்யும் நடவடிக்கை, காணிகளை ஆக்கிரமிக்கும் நகர்வாக இருக்கலாம் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சந்தேகம் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## வழக்கறிஞரானார்...

பொறுப்பேற்றார். சிறைக்காலத்திலும், அதற்குப் பின்னரும் சட்டத்துறை சார்ந்த கற்றலை மேற்கொண்டே அவர் நேற்றுச் சட்டத்தரணியாகப் பதவியேற்றார். எந்த நீதிமன்றத்தின் படிகளில் தனக்கான நீதிக்காக காவலர்கள் புடைசூழ 31 ஆண்டுகள் ஏறி இறங்கினாரோ அதே நீதிமன்றத்தில் அவர் வழக்கறிஞராகியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-35-26-66)

## நேட்டோவிலிருந்து ஸ்பெய்னை உடனடியாகத் தூக்கி வீசுங்கள்!

### அமெரிக்கா கொடுக்கிறது அழுத்தம்

நேட்டோ கூட்டணியில் இருந்து ஸ்பெய்னை உடனடியாக நீக்குமாறு அமெரிக்கா அழுத்தம் வழங்கி வருகின்றது என, சர்வதேச ஊடகமான ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

ஈரானுக்கு எதிராக அமெரிக்கா மேற்கொண்டுவரும் இராணுவ நடவடிக்கையை ஸ்பெய்ன் கடுமையாக விமர்சித்து வருகின்றது. ஈரான் மீதான அமெரிக்காவின் இராணுவ நடவடிக்கையைக் கண்டித்த முதல் ஐரோப்பிய நாடாகவும் ஸ்பெய்ன் பதிவாகியுள்ளது. ஸ்பெய்னின் நிலைப்பாடு அமெரிக்காவுக்குப் பல்வேறு விடயங்களில் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறான நிலையிலேயே, ஸ்பெய்னை நேட்டோ கூட்டணியில் இருந்து நீக்குமாறு அமெரிக்கா அழுத்தம் வழங்கிவருகின்றது என நம்பகரமான முறையில் தெரியவருகின்றது. அத்துடன், ஈரானுக்கு எதிரான அமெரிக்காவின் இராணுவ நடவடிக்கைக்கு கடும் அதிருப்தியை வெளியிட்ட நேட்டோ நாடுகள் மீது நடவடிக்கை எடுக்குமாறும் பென்டகன் கூறியுள்ளதாகத் தெரியவருகின்றது. அமெரிக்காவின் கோரிக்கைகளை ஏற்பதற்கு நேட்டோ கூட்டணி மறுப்புத் தெரிவித்துள்ளதாகவும் ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது. இந்த விடயத்தில் அதிபர் ட்ரம்புக்கும், நேட்டோ கூட்டணியின் பொதுச்செயலருக்கும் இடையில் விரைவில் கலந்துரையாடல் நடைபெறும் என்றும் அந்தச் செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# டெல்லியைநேற்று ஊதியது பெங்களூர்




**ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில், டெல்லியை சுலபமாக வீழ்த்தி அபார வெற்றிபெற்றது பெங்களூர்.**

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பெங்களூர் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய டெல்லி அணி முன்வரிசை வீரர்களையும், மத்திய வரிசை வீரர்களையும் அடுத்தடுத்து இழந்தது. ஹேசில்வூட், புவனேஸ்வர்குமார் இருவரும் தலா மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்ற 8 ஓட்டங்களில் 6 விக்கெட்டுக்களை இழந்தது டெல்லி. அபிஷேக் போரல் 30, டேவிட் மில்லர் 19, ஜெமிசன் 12 என ஓரளவு ஆறுதல் வழங்க அந்த அணி அனைத்து இலக்குகளையும் இழந்து 75 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குக் களமிறங்கிய பெங்களூர் அணி 6.3 ஓவர்களில் ஒரேயொரு இலக்கை இழந்து வெற்றிபெற்றது. படிக்கல் 34 ஓட்டங்களுடனும், கோலி 23 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர். (ம)

## சாவகச்சேரியில் கத்திக்குத்து ஒருவர் பொலிஸாரால் கைது!

யாழ்ப்பாணம், ஏப். 28

யாழ்ப்பாணம் சாவகச்சேரிப் பகுதியில் நேற்று இடம்பெற்ற கத்திக்குத்துத் தாக்குதல் தொடர்பில் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குடும்பப் பிரச்சினை காரணமாகவே இந்தத் தாக்குதல் இடம்பெற்றதாக பொலிஸாரின் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. கைது செய்யப்பட்ட நபரை நீதிமன்றத்தில் முற்படுத்தும் நடவடிக்கையை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-26-28)

## உணவகங்களில் விசேட களஆய்வு

யாழ்ப்பாணம்,ஏப்.28

பருத்தித்துறை நகரசபைக்குட்பட்ட உணவகங்கள் மற்றும் உணவு கையாளும் நிலையங்கள் நகரசபை பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ப.தினேஸ் தலைமையிலான, பொதுச்சுகாதார பரிசோதகர்களால் நேற்றுமுன்தினம் விசேட கள ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன.

இதன்போது உணவகங்கள், உணவு கையாளும் நிலையங்களில் பேணப்பட வேண்டிய ஆவணங்கள், அனுமதிச்சீட்டுகள் என்பன சரிபார்க்கப்பட்டதுடன், பின்பற்றவேண்டிய சுகாதார வழிகாட்டுதல்கள் தொடர்பான ஆலோசனைகளும் வழங்கப்பட்டன. (க-100)

## பிரதேசசபை கூட்டத்தில் உறுப்பினருக்கு அவமதிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.28

மானிப்பாய் பிரதேசசபையின் மாதாந்த அமர்வில், உறுப்பினர் ஒருவர், தவிசாளரால் அவமதிக்கப்பட்டுள்ளார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

சபையின் மாதாந்த அமர்வானது, தவிசாளர் க.ஜெசீதன் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. உறுப்பினரான நா.பகீரதன், தவிசாளரின் வட்டாரத்தில் உள்ள பிரச்சினை தொடர்பாக கருத்துக்கூற முற்பட்ட வேளை, கூட்டத்தை முடித்துவிட்டு தவிசாளர் எழுந்து சென்றுள்ளார். தனக்குக் கருத்து தெரிவிக்க சந்தர்ப்பம் வழங்கவேண்டும். கூட்டத்தை முடிவுறுத்த வேண்டாம் என்று உறுப்பினர் கோரியும், அவரை அவமதிக்கும்வகையில் தவிசாளர் சபா மண்டபத்தை விட்டு வெளியேறியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (க-27)

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டியில்
50 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு

- 1 1/2 பரப்பாகவும் இரண்டு பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ்ப்பாணம் இருந்து ஊர்காவற்றுறை செல்லும் பிரதான காப்பற் வீதி முகப்புடன்.
- யாழ் பஸ் நிலையத்திலிருந்து 4 km தூரம்
- ஒரு பரப்பின் விலை முன்பகுதி 12 இலட்சம், பின்பகுதி 10 லட்சம்.
- திருமண மண்டபம் அமைப்பதற்கும், கடைகள் கட்டுவதற்கும், வீடு கட்டுவதற்கும் உகந்த இடம்.

தொடர்பு:- 076 99 03 039
076 98 78 617

## மரண அறிவித்தல்



மலர்வு 09 . 08 . 1956

உதிர்வு 26 . 04 . 2026

(CS/31694) J-1

**திரு. ஜெகநாதன் பிரபாகரன்**

வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திரு. ஜெகநாதன் பிரபாகரன் அவர்கள் கடந்த (26.04.2026) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜெகநாதன் - நேசரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சண்முகராசா - பொன்மலர் தம்பதியரின் பாசமிகு மருமகனும், நாகராணி அவர்களின் பாசமிகு கணவரும், கருணாகரனின் (ஜேர்மன்) அன்புச் சகோதரனும், குகதர்சன் (நீர்ப்பாசன திணைக்களம் - வவுனியா), ஜெகதர்சன் (சுவிஸ்), கிரிஷாந் (அஞ்சல் அலுவலகம் பண்டத்தரிப்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தனுசியா (YMCA முன்பள்ளி பண்டத்தரிப்பு), லதுஷா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சங்கவி, ஹர்சன், ஆத்விகா, ஆதிஷ், ஆத்வின் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.04.2026) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் வடலியடைப்பில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
வடலியடைப்பு
தர்சன் - 077 104 1214, கிரி - 077 874 6843

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு அருகாமையில்
06 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- A9 றோட்டில் இருந்து 100m தூரம்
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்டுள்ளது
- நன்னீர் ஊற்று, நல்ல சூழல்
- சகல ஆவணங்களுடன் நீண்ட கால தோம்புடன் நிலப்பரப்பு.
- பார்வையிடும் நேரம் : காலை 8.30 தொடக்கம் மாலை 6.30 மணிவரை

தொடர்பு:- 077 6234 204

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.04.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.